**24-06-2022** ஓம் சாந்தி மாதேஷ்வரி மதுவனம்

மம்மாவின் நினைவு நாளன்று வகுப்பில் வாசிக்கப்பட வேண்டிய மாதேஸ்வரிஜியின் இனிய மேன்மையான வாசகங்கள்

செயல்களே இன்ப துன்பத்திற்கான காரணம்

வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் எங்களுடைய செயல்களின் விளைவே என்பதை ஒவ்வொரு மனிதரும் அறிவார்கள். முன்னர் நாங்கள் நிச்சயமாக அத்தகைய செயல்களை செய்திருக்கின்றோம், அதன் விளைவை நாங்கள் இன்பம் துன்பம் என்ற வடிவில் அனுபவம் செய்ய வேண்டும். எனவே, இன்பமும் துன்பமும் எங்கள் செயல்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. கர்மாவை நாங்கள் விதி என அழைக்க முடியாது. சிலர் அது தங்கள் விதி என நினைக்கின்றார்கள். ஆகையால் அவர்கள் இன்பமும்; துன்பமும் தமது விதி என கருதுகின்றார்கள். இது கடவுள் அல்லது வேறொருவர் எமது விதியை உருவாக்கினார்கள் எனக் கூறுவதைப் போன்றதாகும். அதனாலேயே அவர்கள் அது தமது விதியில் உள்ளது எனக் கூறுகின்றார்கள். எவ்வாறாயினும், எங்கள் விதியை உருவாக்குவது யார் என்பதை புரிந்து கொள்வது மிக அவசியமாகும். கடவுள் எங்கள் விதியை உருவாக்கவில்லை. எங்கள் விதி முன்கூட்டியே உருவாக்கப்பட்டுள்ளது என்றில்லை, இல்லை. மக்கள் அனுபவம் செய்கின்ற இன்பமும் துன்பமும்; மனிதர்களாலேயே உருவாக்கப்பட்டுள்ளது, ஏனெனில், மக்களே செயல்களை செய்கின்றார்கள். ஆகையாலேயே அதற்கு நாங்களே பொறுப்பாகும். ‘தினை விதைத்தன் தினை அறுப்பான்’ என்பது பொதுவான கூற்றாகும். யார் எதை செய்கின்றார்களோ, அதன் பலனை அவர்கள் பெறுகின்றார்கள். கீதையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது: ‘ஒரு மனிதனே தனக்கு நண்பனும், தனக்கு எதிரியும்!’ கூறப்படவில்லை: ‘நான் உங்கள் எதிரி, நான் உங்கள் நண்பன்!’ இல்லை, ஒரு மனிதரே தனது நண்பனும், அவரது சொந்த எதிரியும் ஆவார். ஆகையாலேயே ஒரு நபர் தனக்கே நண்பனும், தனக்கே எதிரியும், அவரே தனக்கு சந்தோஷத்தையும் துன்பத்தையும்; கொடுக்கின்றார். ஆகையாலேயே, எந்த வடிவத்தில் உங்களுக்கு துன்பம் வரும் போதும், அதனை நீங்கள் அகற்ற முயற்சிக்கிறீர்கள். எங்கேனும் சண்டையோ சச்சரவோ இடம்பெற்றால், அதனை நீங்கள் நிறுத்த முயற்சிக்கிறீர்கள், சிலவேளைகளில், சிலருக்கு அகால மரணமும் ஏற்படுகின்றது, அப்பொழுது அவர்கள் துன்பப்படுகின்றார்கள். அப்பொழுது அவர்கள் நினைக்கின்றார்கள்: இது ஏன் எனக்கு நடக்கின்றது என எனக்குத் தெரியவில்லை. அந்தத் தாக்கத்தில், அவர்கள் கடவுள் மீது குற்றம் சுமத்த ஆரம்பிக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு அவ்வாறு நடந்ததற்கு யார் காரணம்? அகால மரணம் இடம்பெற்றதற்கு அல்லது ஏதோ ஒரு நோய் வடிவத்;தில் அவர்கள் துன்பத்தை அனுபவம் செய்திருந்தால், அதனை கடவுளா கொடுத்தார்? உலகில் இடம்பெறுகின்ற சகல சண்டை சச்சரவுகளுக்கும் சகல துன்பத்திற்கும் காரணம், அவை அனைத்தையும் கடவுளா உருவாக்கினார்? துன்பத்தை அகற்றுபவரும், சந்தோஷத்தை அருள்பவரும் என்றே கடவுளை நீங்கள் அழைக்கின்றீர்கள். ஆகையாலேயே நீங்கள் துன்பப்படும் போதெல்லாம், நீங்கள் அவரை

நினைவுசெய்கிறீர்கள். உங்கள் சரீரம் நோய்வாய்ப்படும் போதும், நீங்கள் கடவுளை அழைக்கிறீர்கள்: ஓ கடவுளே! நீங்கள் அவரை துன்பத்தின் போது மட்டுமே நினைவுசெய்கிறீர்கள். எனவே, என்னிடம் கூறுங்கள், அவர் உங்களுக்குத் துன்பத்தை விளைவித்திருந்தால், துன்பத்தை விளைவிக்கின்ற ஒருவர் என்ன செய்வார்? இதுவும் புரிந்து கொள்ளப்பட வேண்டியதொரு விடயம். நாங்கள் அவரை நினைவுசெய்வதால், எங்களுக்கு அவருடன் வேறானதொரு உறவுமுறை உள்ளது. துன்பத்தை அருள்பவர் என்றல்ல. துன்பத்திற்கான காரணம் அல்லது வேறொரு நபரா அதற்கு பொறுப்பாளி என்பதையே இது காட்டுகின்றது. இதிலும் கூட மூன்றாம் நபர் ஒருவர் இல்லை. ஒன்று நான், அடுத்தது எனது படைப்பாளி, அவ்வளவே. இருவர் மட்டுமே உள்ளனர். ஒன்று நான் அவரது படைப்பு அல்லது அவரின் குழந்தை என்றும் கூறலாம், அடுத்தது தந்தை ஆகும். எனவே ஒன்று தந்தை பொறுப்பாளி அல்லது நான் பொறுப்பாளி. எவ்வாறாயினும், எனக்கு துன்பம் ஏற்படும் போது, படைப்பவர் எனக்குத் துன்பத்தை விளைவித்துவிட்டார் என்பதைப் போலுள்ளது. உள்ளார்ந்தமாக, அவரே எனக்கு சந்தோஷத்தை அருள்பவர் என நான் உணர்கின்றேன். நீங்கள் சந்தோஷம் என்ற ஆதாரத்தை வேண்டுவதை போலுள்ளது: ஓ கடவுளே, இந்தத் துன்பத்தை அகற்றுங்கள்! கடவுளே எனக்கு நீண்ட ஆயுளைக் கொடுங்கள்! பாருங்கள், மக்கள் நீண்ட ஆயுளுக்காகவும் வேண்டுகின்றார்கள். நீண்ட ஆயுள், துன்பம், சரீர நோய், எந்த சண்டை அல்லது சச்சரவு, அமைதியின்மை ஏற்படும் போதும், அவர்கள் கடவுளிடமே கேட்;கின்றார்கள். ஒரு குழந்தை விவேகம் அற்றிருந்தால், அவர்கள் கூறுகின்றார்கள்: ஓ கடவுளே, அவருக்கு ‘சமத்’ (நல்ல புத்தி) கொடுங்கள். எனவே அவர்கள் அவரிடம் வழிகாட்டல்களுக்காக வேண்டுகின்றார்கள். ஏதாவது ஒன்று உங்களுக்கு துன்பத்தை அல்லது வேதனையை கொடுத்தால், அந்த வேதனையின் போது அவர்கள் அவரை நினைவுசெய்து, தாம் விரும்பியதை கேட்கின்றார்கள். அவரிடம் தமக்கு வேண்டியதை அவர்கள் கேட்பதால், அவர் நிச்சயமாக அதனை அருள்பவர் ஆவார். அத்துடன் அவரே எமக்கு சந்தோஷத்தை கொடுப்பவர். அவரே அனைத்தையும் சுகப்படுத்தக் கூடியவர் என்பதே அதன் அர்த்தமாகும். நாங்கள் அவரை வெறுமனே நினைவுசெய்வதில்லை, ஆனால் அவரிடம் தீர்வு உள்ளது. எனவே எங்களிடம் என்னென்ன பழக்கவழக்கங்கள் உள்ளனவோ, அறிந்தோ அல்லது அறியாமலோ நாங்கள் துன்பத்தின் போது நிச்சயமாக கடவுளை நினைவுசெய்கின்றோம். ஏதோ ஒன்று நிகழும் பொழுது, நாங்கள் உடனடியாக, “ஓ கடவுளே!’ எனக் கூறுகின்றோம். ஒருவருக்கு கடவுள் யார் என்பதும், அவர் என்ன செய்கிறார் என்பதும் - தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் இது நிச்சயமாக அவரின் வாயிலிருந்து வெளிப்படுகின்றது. இதுவும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இறுதியில், நாங்கள் நினைவுசெய்கின்ற அவருக்கும், எங்கள் துன்பங்கள் அனைத்திற்கும் தொடர்பு உள்ளதா? அவர் துன்பத்தை அருள்பவரா அல்லது எங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுப்பதற்கும் அவருக்கும் தொடர்பு உள்ளதா? நாங்கள் அவரை நினைவுசெய்வது, எவருக்கும் துன்பம் விளைவிக்காதிருப்பதே அவரின் பணி என்பதைக் காட்டுகின்றது. அதற்கான காரணம் அவராயின், நாங்கள் ஏன் அவரை நினைவுசெய்ய வேண்டும்? பொதுவாக உங்களுக்கு துன்பம் விளைவிப்பர் மீது நீங்கள் கோபமே படுவீர்கள். நீங்கள் நினைப்பீர்கள்: அவருக்கு என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. எவ்வாறாயினும், கடவுளை பொறுத்தவரையில், அவர் மீது அன்பே உள்ளது, அதிலும் குறிப்பாக

துன்பவேளையில், உள்ளார்;ந்தமாக, அவரை நீங்கள் ஓர் உற்ற நண்பராகவே உணர்வீர்கள். உள்ளார்த்தமாக சந்தோஷமே இருக்கும். எனவே, அவரிடமான எங்கள் உறவு நிச்சயமாக சந்தோஷமே ஆகும். எனவே, எங்கள் துன்பத்திற்கு நிச்சயமாக வேறொன்றே காரணமாக இருக்க வேண்டும். மூன்றாம் நபர் எவருமாக இருக்க முடியாது: ஒன்று நான், மற்றவர் அவர் (கடவுள்) என்பதால், நானே நிச்சயமாக பொறுப்பாகும். (எனது துன்பத்திற்கு).

எனவே, நான் எதற்கு கருவியாக இருக்கின்றேனோ, நானே துன்பத்தினால் வேதனைப்படுகின்றேன். அதனை எனக்காக நானே உருவாக்கிக் கொள்கின்றேன். ஆகவே, இது மிக விவேகமற்றதாகும்! நான் விடுபட வேண்டும் என விரும்புகின்ற ஒன்றை, நானே எனக்கு உருவாக்கிக் கொள்கிறேன். எனவே இது வியப்பிற்குரிய ஒரு விடயமாகும், அப்படித்தானே? மக்கள் துன்பத்தை விரும்பவில்லை, எனினும் அவர்கள் தொடர்ந்தும் அதனை உருவாக்கிக் கொள்கிறார்கள். ஆகையால் அவர்கள் அறியாத, அவர்கள் புரிந்து கொள்ளாத ஒரு விடயம் நிச்சயமாக உள்ளது. எனவே உங்களுக்கு தெரியாதவற்றை, முதலில் நீங்கள் அதனைப் பற்றி தெரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அதனைப் பற்றி நான் நிச்சயமாக சற்றேனும் அறிந்து கொள்ளவோ அதனை புரிந்து கொள்ளவோ வேண்டும். அந்த புரிந்துணர்விற்கான தேடுதலை கொண்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், இன்றும் கூட, அந்த ஆதரவற்ற மக்கள் அந்த விடயங்களை புரிந்து கொள்ளாமல் இருப்பதற்குப் பல காரணங்களைக் கூறுவது ஆச்சரியமாக உள்ளது. தாம் ஓய்வாக இல்லை என்றோ அதற்கு நேரம் இல்லை என்றோ கூறுகின்றார்கள். நாங்கள் என்ன செய்ய முடியும்? நாங்கள் எங்கள் இல்லறத்தையோ அல்லது வியாபாரத்தையோ கவனித்துக் கொண்டிக்கவோ அல்லது இதனை அல்லது அதனை செய்து கொண்டிருக்கவோ வேண்டுமா? நாங்கள் என்ன செய்ய வேண்டும்? ஆகையாலேயே அவர்கள் அனைத்தையும் கவனித்துக் கொள்ளும் போது சந்தோஷத்தை இழக்கின்றார்கள். 'இது எனது, இது எனது' எனக்கூறுவதன் மூலம் நான் துன்பத்தை உருவாக்கிக் கொண்டதால், நான் எனக்காக இந்தத் துன்பத்தை ஏறுபடு;த்திக் கொண்டதால், அனைத்திற்கும் முதலில் அதனை நான் சீராக்கிக் கொள்ள வேண்டும். அனைத்திற்கும் முதலில் நான் ஏன் சந்தோஷமிழந்திருக்கின்றேன் என்பதை நான் புரிந்து கொள்ள வேண்டும். சந்தோஷம் எனக்குரியது இல்லையா? நான் முதலில் இதனை அறிந்து கொள்ள வேண்டும்.

உங்களுடையது எனக் கருதுகின்ற விடயங்கள் அனைத்தும் தான் உங்கள் துன்பத்திற்குக் காரணம் என்பதை புரிந்து கொள்வதில் இருந்து இந்த விபரங்களை கண்டு கொள்ள முடியும். அந்தத் துன்பத்திற்கு என்ன தீர்வு என்பதை அறிந்து கொள்வது வாழ்க்கைக்கு மிக முக்கியமாகும். அதனை அறிந்து கொண்டவர்களும், 'நான் என்ன செய்வது? நான் எவ்வாறு இதனை செய்வது? நான் எனது இல்லறத்தையும் அனைத்தையும் விட்டு விடுவதா?' என அவர்கள் கூறுகிறார்கள். எனவே மக்களின் புத்தி எவ்வாறு வேலை செய்கின்றது என்பது ஆச்சரியமாகும், அதாவது அவர்களுக்கு புரிந்துணர்வை கொடுத்த பின்னரும், அவர்களால் அதனை கிரகிக்க முடியவில்லை. நாங்கள் இவ்விடயங்களை அனுபவத்தினூடாக புரிந்து கொள்கின்றோம், நாங்கள் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். இது அனுபவம் செய்யப்பட வேண்டிய

ஒன்றாகும். நாங்கள் நிச்சயமாக அதனை அனுபவம் செய்திருப்பதாலேயே, எங்களால் நடைமுறையில் எவ்வாறு சந்தோஷமாக இருக்கலாம் என்பதை உங்களுக்குக் கூற முடியும். எங்களுக்கு இந்த ஆசை நீண்ட காலமாக இருக்கின்றது. இப்பொழுது சந்தோஷத்தை அருள்பவர், தானே தனது சொந்த அறிமுகத்தைக் கொடுக்கின்றார்: ஓ குழந்தைகளே, நீங்கள் எவ்வாறு சந்தோஷமிழந்தவர்கள் ஆகினீர்கள்? அது உங்களுடைய தவறாகும். உங்களுக்;குள் இருப்பது என்ன என்பது உங்களுக்கே தெரியாது, அதுவே நீங்கள் துன்பத்தை எடுப்பதற்குக் காரணமாக உள்ளது. உங்கள் துன்பத்திற்கு உங்கள் செயல்களா காரணம்? இதனை வந்து புரிந்து கொள்ளுங்கள், பாருங்கள், நாங்கள் இதனை உங்களுக்குக் கொடுக்கின்றோம். இருப்பினும், அது அற்புதமாகும். அவர்கள் இதனை செவிமடுத்த பி;ன்னரும், அந்த ஆதரவற்ற மக்கள் கூறுகின்றார்கள்: இவ்வாறே நாங்கள் தொடரவேண்டும் போலுள்ளது, இதுவே மாயையின் மீது கொண்டுள்ள பற்றாகும். மாயை அவர்களை முற்றாக பிடித்துக் கொண்டிருக்கின்றாள். அவர்கள் நாள் முழுவதும் எதற்காக பிரயத்தனம் செய்கின்றார்களோ, அவர்களின் சந்தோஷத்திற்கும் துன்பத்திற்கு என்ன காரணம் என்பதை தந்தை தானே அவர்களிடம் கூறுகின்றார்.

தந்தை தானே கூறுகின்றார்: நான் உங்கள் துன்பம் முழுவதையும் எடுத்துக் கொண்டு சந்தோஷத்தைக் கொடுக்கவே வந்திருக்கின்றேன். ஆகையாலேயே நீங்கள் பாடுகிறீர்கள்: ஓ துன்பத்தை அகற்றுபவரே, சந்தோஷத்தை அருள்பவரே. எப்பொழுதுமே கூறப்படுவதில்லை: இன்று, நீங்கள் எங்களுக்குத் துன்பத்தை விளைவித்தீர்கள், எங்கள் சந்தோஷத்தை அகற்றினீர்கள். இல்லை. அவரே எங்கள் துன்பம் அனைத்தையும் அகற்றுபவர். தந்தை கூறுகின்றார்: நான் குறிப்பாக உங்கள் துன்பத்தை அகற்றி விடவே வந்திருக்கின்றேன். எவ்வாறாயினும், அதனை செய்வதற்கு நான் உங்களுக்கு, உங்கள் துன்பம் முடிந்து விடும் வகையான செயல்களை செய்வதற்கு உங்களுக்குக் கற்பிக்கின்றேன். நான் என்னவெல்லாம் உங்களுக்கு விளங்கப்படுத்தி கற்பிக்கின்றேனோ, அதனை புரிந்து கொண்டு முயற்சி செய்யுங்கள், அப்பொழுது உங்கள் துன்பம் அகன்றுவிடும். நான் உங்கள் துன்பத்தை அகற்றிவிடுவதற்கான கற்பித்தல்களை உங்களுக்குக் கொடுக்கின்றேன். எனவே அவற்றைக் கிரகியுங்கள், ஏனெனில் அது உங்கள் சொத்தாகும். எனினும் சில அப்பாவி, ஆதரவற்றவர்கள், கடவுளுக்கு தாம் ஏதோ உதவி செய்வதாக நினைத்து சாக்குப்போக்குக் கூறிகின்றார்கள். சிலர் கூறுகின்றார்கள்: எனக்கு நேரம் கிடைத்தால், நான் அதனை செய்வேன். ஓ அன்பான சகோதரரே! நீங்கள் உண்பதில், பருகுவதில், அனைவருக்கும் சேவை செய்வதில் நீங்கள் உருவாக்கிய அந்த செயல்களின் கணக்கினாலேயே நீங்கள் சந்தோஷம் இழந்தீர்கள். ஒரு புறம், நீங்கள் துன்பத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் எனக் கூறுகிறீர்கள், மறுபுறம் அந்தத் துன்பம் அனைத்திலிருந்தும் விடுவித்துக் கொள்ள உங்களுக்கு வழிகாட்டிய பின்னரும், அரிதாக சிலரின் புத்தியிலே இது நிற்கின்றது. இவ்வாறாக, ஐந்து விகாரங்களே மாயை என அழைக்கப்படுகின்றது, ஆனால் மக்கள் செல்வத்தையும் செழிப்பையும் மாயை எனக் கருதுகின்றார்கள். சிலர் தமது சரீரங்களே மாயை எனக் கூறுகின்றார்கள், அதிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு, வழிகளை தேட முயற்சிக்கிறார்கள். எவ்வாறாயினும், தந்தை கூறுகின்றார்: உங்கள் துன்பத்திற்கு காரணம் வேறொன்றாகும். தத்துவங்கள் எனது படைப்புகள்.

அநாதியானவை எவையும் துன்பத்திற்கு காரணம் அல்ல. உங்களுக்குள் இருக்கின்ற மேலதிகமான ஒன்றே உங்கள் துன்பத்திற்குக் காரணமாகும். அது ஐந்து விகாரங்கள் (மாயை) என அழைக்கப்படுகின்றது. விகாரங்கள் சரீரம் அல்ல. உலகம் விகாரங்களால் ஆக்கப்படவில்லை. செல்வமும், செழிப்பும் விகாரங்கள் அல்ல. விகாரங்கள் வேறொன்றாகும். இந்த விகாரங்கள் வழக்கத்திற்கு வரும் போது, இவை அனைத்துமே துன்பத்திற்குக் காரணம் ஆகுகின்றன. ஆத்மாக்களை பொறுத்தவரையில், செல்வம், செழிப்பு போன்றன எங்கள் சந்தோஷத்திற்குக் காரணமாகின்றன, ஆனால் இவ்விடயங்கள் அனைத்தையும் பற்றிய ஞானம் உங்களுக்கு முழுமையாக இல்லாததால் அவை உங்களுக்கு துன்பத்தை விளைவிக்கின்றன. நான் படைக்கின்ற அநாதியான படைப்பு, துன்பத்திற்குக் காரணமாகாது, இல்லை. உங்கள் துன்பத்தை நீங்களே விளைவித்துக் கொள்கிறீர்கள். வேறொன்று உங்களுக்குள் விருத்தி செய்யப்பட்டுள்ளது. அந்த வெறொன்றே ஐந்து விகாரங்களான மாயையாகும். நீங்கள் இப்பொழுது அதனை அகற்ற வேண்டும். மக்கள் கூறுகின்றார்கள்: கடவுளே இவை அனைத்தையும் கொடுத்தார். கடவுள் எதனையும் கொடுத்திருந்தால், அது சந்தோஷத்திற்கான ஒன்றாகவே இருக்கும். இவ்விடயங்கள் அனைத்திலும் நீங்கள் விகாரங்களை இட்டு அவற்றை சீரழித்து விட்டீர்கள். ஆகையாலேயே தந்தை கூறுகின்றார்: இவ்விகாரங்களை அகற்றி விட்டால், நீங்கள் எக்காலத்திற்கும் சந்தோஷமானவர் ஆகுவீர்கள். இவ் விடயங்கள் அனைத்தும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இதற்கு நீங்கள் சற்று நேரத்தை ஒதுக்க வேண்டும். உங்கள் துன்பத்தை முடிப்பதற்கான வழியை நீங்கள் கற்ப வேண்டும். இதற்கு, நீங்கள் மீண்டும் மீண்டும் வந்து எதனையாவது கற்க வேண்டும் என உங்களுக்குக் கூறப்பட்;டுள்ளது. எவ்வாறாயினும், நீங்கள் இங்கே வந்து இவற்றை செவிமடுக்கிறீர்கள், வெளியே சென்ற பின்னர் அனைத்தும் முடிந்து விட்டது என்றிருக்கக் கூடாது. இவை அனைத்தும் மூத்தவர்களுக்கு அல்லது முதியவர்களுக்கு என சிலர் கூறுகின்றார்கள். முதியவர்கள் மாத்திரமா தமது வாழ்வை உருவாக்கிக் கொள்ள வேண்டும்? முதியவர்கள் தவறான ஏணியில் ஏறி, அந்த அனுபவத்தின் பின்னர், கீழே வந்திருக்கின்றார்கள். அதற்குப் பதிலாக, ஏணியில் ஏறுவதற்கு முன்னர் உங்களை நீங்கள் எச்சரிக்கை செய்து, உங்கள் வாழ்வை எவ்வாறு வாழ்வது என புரிந்து கொள்ளுங்கள். ஆகையாலேயே உங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது: இவ்விடயங்களை புரிந்து கொண்டு, உங்கள் துன்பத்திற்கான அத்திவாரத்தையும் உங்கள் துன்பத்திற்குக்கான காரணத்தையும் அகற்றுவதற்கு முழு முயற்சி செய்யுங்கள்.

தந்தையான கடவுள் மீது எங்களுக்கு உள்ள உரிமையை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்;. அவரே அனைவரதும் தந்தை ஆவார், அவரிடமிருந்து அந்த உரிமையை கோரிக் கொள்ளுங்கள். அவரை நீங்கள் வெறுமனே தந்தை என அழைத்தால் போதாது, ஆனால், வந்து, அவரிடமிருந்து நீங்கள் எதனை கோரிக் கொள்ள வேண்டும் என்பதை செவிமடுத்து, புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் தொடர்ந்தும் அனைவருக்கும் இந்த அழைப்பிதழை கொடுப்போம். முன்னரும், நாங்கள் இந்த அழைப்பிதழை வழங்கி, அனைவருக்கும் செய்தியை கொடுத்தோம். அப்பொழுது பலமில்லியனரில் ஒரு கைப்பிடி அளவினர் விழித்தனர். முன்னரும் இதுவே இடம்பெற்றது, ஆகையாலேயே கடவுள் தானே வந்து கூறினார்: பலமில்லியன் எண்ணிக்கையினரில் ஒரு கைப்பிடி அளவினரே

என்னை அறிந்திருக்கின்றார்கள். எனவே இங்கே வந்ததால், இவ்விடயங்களை நீங்கள் புரிந்து கொண்டு, அதனை பற்றி அவர்களுடன் உரையாடி அவற்றைக் கிரகியுங்கள். இவ்விடயங்கள் அனைத்தையும் ஒரேநாளில் விளங்கப்படுத்த முடியாது. அச்சா.

இனிமையிலும் இனிமையான குழந்தைகளே, அன்பும் நினைவுகளும்; நமஸ்தேயும்.

ஆசீர்வாதம்: உங்களுடைய பூஜிக்கத்தக்க வடிவத்தின் விழிப்புணர்வின் மூலம் நீங்கள் ஜீவன்முக்தி அடைந்து, சதா ஆன்மிக போதையை கொண்டிருப்பீர்களாக.

பிராமண வாழ்வின் சந்தோஷம் ஜீவன்முக்தி ஸ்திதியிலேயே தங்கியுள்ளது. சதா தமது பூஜிக்கத்தக்க வடிவத்தின் விழிப்புணர்வுடன் இருப்பவர்களின் பார்வை தந்தையை தவிர வேறு எதனையும் நோக்கி இருக்க முடியாது. மக்கள் அனைவரும், உடமைகள் அனைத்தும், பூஜிக்கத்தகுதியான ஆத்மாக்கள் முன்னிலையில் தலைவணங்கி நிற்கும். பூஜிக்கத்தகுதியான ஆத்மாக்கள் என்றுமே எதனாலும் கவரப்பட மாட்டார்கள். அவர்கள் தமது மனதிலோ அல்லது புத்தியிலோ எவரிடமும் தலைவணங்க மாட்டார்கள். தமது சரீரத்திடமோ, உறவினர்களிடமோ, உடைமைகளிடமோ அல்லது சம்ஸ்காரங்களிடமோ தலைவணங்க மாட்டார்கள். அவர்கள் என்றுமே எந்த பந்தனத்திலும் கட்டுண்டு விடாது, சதா ஜீவன்முக்தி ஸ்திதியை தொடர்ந்தும் அனுபவம் செய்வார்கள்.

சுலோகம்: உண்மையான சேவையாளர்கள் கருவிகளும் பணிவானவர்களும் ஆவார்கள்.

--ஓம் சாந்தி---

ஓம் சாந்தி